முருகப்பெருமான் துணை

**மகான் சிவவாக்கியர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.02.2024**, செவ்வாய்கிழமை

1. வணங்கிவரும் தலைமுறைகள்
வள்ளலாக வரம்பெற வேண்டி
இணங்கி ஞானம் அருளுகின்ற
ஏழாம்படை வீடு படைத்த ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன்பெருமை கூறி
இனிமைபட சோபகிருது கலைதிங்கள்
இருபான் சூலதிகதி குசன் வாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 23 ம் நாள், 06.02.2024, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் துல்லிய ஆசிதனை
வழங்குவேன் சிவவாக்கியரும்
சோரமில்லா ஞானவான்கள் படை
செகமெல்லாம் உருவாக உரைப்பேன்
4. உரைக்கவே ஓங்கார ஞானசபை
உலகை மாற்றும் விதமாக
குறைவிலா தரும சக்தியோடும்
குருமார்கள் ஆசியோடும் இயங்கி வர
5. வருகவே உலகோர் பிரணவக்குடிலில்
வாசம் செய்தாலே போதுமப்பா
தரும சிந்தையாக ஆற்றல் பரவி
தன்னார்வத் தொண்டர்களாக மாறும்
6. மாறும் மகா சக்தி நிலை கூடி
மகான் அரங்கன் பார்வைபட
ஆறுமுகக் கடவுளை வழிபட்டு
அடைகின்ற வல்லமையும் வரமாக
7. வரமாகக் கிட்டி உலகோர்
வாழ்க்கை நெறி வள்ளல் நெறியே என
தரமாக அறமாக உணர்ந்து
தெளிந்துமே தொடர நேரும்

8. நேருமைபட அன்னதான சேவையை
நிலவுலகப் பசிபிணி அகலும்படி
பெருமளவில் செய்து வருக
பேரிடரே அகலும் விலகி ஓடும்

9. ஓடவே எங்கும் தீவினை ஒழிந்து
ஓங்காரன் வெளிப்பட உலகினில்
சுடராக பரவி முருகப்பெருமானும்
சுத்தநெறி ஏற்ற மக்களுக்கு

10. மக்களுக்கு காட்சிதனை தந்து
மரணம் மறுமை வெல்லும்படி
ஆக்கமுடன் பூரணத்துவம் கூடி
அனைவரும் ஞானிகள் ஆவர்

11. ஆகவே உலகம் எங்கிலுமே
அரங்கமகான் ஞானப்படை
மிகுந்துமே உலகமாற்றம் நிகழும்
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–